மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண். 75/19

வாக்குமூலம். வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராதாகிருஷ்ணன் | ஜாதி | |
| த/பெ. | முத்தையா | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 70 /2024 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 25.06.2024-ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்தின் புலஎண் 168/5A மற்றும் 5B ஆகும். ஆதியில் புலஎண் 168/5 ஆகும். மேற்படி சொத்து தொடர்பாக ஏற்கனவே வழக்கு நடவடிக்கை நடைபெற்று இருக்கிறதா என்றால் நடைபெற்று இருக்கிறது. மேற்படி வழக்கு நடவடிக்கைகள் எத்தனை வருடங்களுக்கு முன்னால் ஆரம்பித்தது என்றால் சுமார் 20 வருடங்களுக்கு முன்னால் ஆரம்பித்தது. சுமார் 30 வருடங்களுக்கு மேல் இருக்கும் என்றால் இருக்கலாம். வழக்கு நடைபெற்ற காலத்தில் பிரதிவாதி தகப்பனார் ஆறுமுகம் தாவா சொத்தில் வீடு கட்டி குடியிருந்தாரா என்றால் குடியிருந்தார் நாங்கள் அனுமதித்ததான் பெயரில் குடியிருந்தார். நாங்கள் அனுமதித்ததான் பெயரில் ஆறுமுகம் குடியிருக்கவில்லை என்றாலும் அவர் தன் சொந்த சொத்தாக கருதி குடியிருந்தார் என்றால் சரியல்ல.

2. எனது தகப்பனார் பெயர் முத்தையா என்றால் சரிதான். முத்தையாவின் தகப்பனார் பெயர் கருப்பையா ஆகும். மேற்படி கருப்பையாவிற்கு 1, கருப்பையா, 2.முத்தையா, 3.காளிமுத்து என மூன்று மகன்கள். மேற்படி முத்தையா இலங்கைக்கு சென்றார் என்றால் சரிதான். முத்தையா இலங்கையில் திருமணம் செய்துக்கொண்டாரா என்றால் இல்லை இங்கு வந்து தான் திருமணம் செய்துக்கொண்டார். எனது தாத்தா கருப்பையா இங்கு திருமணம் செய்து தான் இலங்கைக்கு சென்றார். எனது தாத்தா கருப்பையாவின் மனைவி பெயர் குப்பம்மாள், குப்பம்மாள் மேல்மங்களம் கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். குப்பம்மாளுடன் பிறந்த ஆண் வாரிசுகள் யாரும்

இல்லை என்றால் சரிதான்.

3. குப்பம்மாளுக்கு மேல்மங்களம் கிராமத்தில் நிறைய சொத்து இருந்தது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களை குப்பம்மாளுக்கு பிறகு அவரது பிள்ளைகளான கருப்பையா, காளிமுத்து, முத்தையா ஆகியோர் தான் அனுபவித்தார்கள் என்றால் சரிதான். அந்த சொத்துக்களை மூவரும் பகுதியாக கிரையம் செய்துக்கொடுத்தார்கள் என்றால் சரிதான். நானும் அந்த கிரைய ஆவணத்தை தாக்கல் செய்துயிருக்கிறேன். குப்பம்மாளின் கணவர் கருப்பையா ரத்தினக்கோட்டை கிராமம், சோமன் குடியிருப்பை சேர்ந்தவர் என்றால் இல்லை. அவரும் மேல்மங்களம் கிராமத்தை சேர்ந்தவர் தான் நான் சொல்வது தவறு என்றாலும் ரத்தினக்கோட்டை சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. மேல்மங்களம் கிராமத்தில் எனது தாத்தா கருப்பையா பெயரில் செட்டில்மெண்ட் பட்டா வழங்கியிருக்கிறார்களா என்றால் இல்லை முத்தையா பெயரில் தான் வழங்கியிருக்கிறார்கள் ஆண்டியப்பன் மகன் முத்தையா என்று வழங்கியிருக்கிறார்கள் எனது தகப்பனாரின் சகோதரர்களான கருப்பையா பெயரிலோ காளிமுத்து பெயரிலோ பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரிதான். செட்டில்மெண்ட்டில் பட்டா வழங்கப்பட்ட காலத்தில் கருப்பையா இலங்கையில் இருந்தார் என்றாலும் எனது தகப்பனாரும் காளிமுத்துவும் இந்தியாவில் இருந்தார்கள் என்றால் சரிதான். எனது தகப்பனார் கருப்பையாவின் மகன்களின் 2 வது மகன் என்றால் சரிதான். காளிமுத்து நடக்கமுடியாத ஊனமுற்றவர் என்றால் சரிதான். எனது அப்பா குடும்பத்தை நிர்வாகம் செய்து வந்தவர் என்பதால் தான் என் அப்பா பெயருக்கு பட்டா வந்தது என்றால் சரியல்ல. எனது அப்பா வெட்டி சீர் செய்து அனுபவம் செய்து வந்ததால் அரசாங்கம் பட்டா கொடுத்தது. எனது அப்பா வெட்டி சீர் செய்து அனுபவம் செய்து வந்ததாக நான் குறிப்பிடும் சொத்து எந்த ஊர் சொத்து என்றால் ரத்தினக்கோட்டை கிராமத்தில் உள்ள சொத்து ஆகும்.

5. ரெத்தினக்கோட்டை கிராம சொத்து ஆதியில் இருந்து எங்கள் குடும்பத்துக்கு பூர்வீக சொத்து என்றாலும் எனது தகப்பனார் வெட்டி சீர் செய்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கு ஆதியில் செட்டில்மெண்ட் காலத்தில் யார் பெயரில் பட்டா என்றால் முத்தையா பெயரில் பட்டா செட்டில்மெண்ட் காலத்தில் ரெத்தினக்கோட்டை கிராமத்தில் 168/5 மற்றும் 168/6 மற்றும் மேல்புறம் உள்ள 168/4 ஆகிய புலஎண்களுக்கு செட்டில்மெண்ட் காலத்தில் யார் பெயரில் பட்டா என்றால் சுப்பையா என்பவர் பெயரில் பட்டா அவரிடம் இருந்து தான் எனது தகப்பனார் கிரையம்

வாங்கினார். நான் சொல்வது மோசடி என்றாலும் சரியல்ல. எனது தாத்தா பெயரும் பெரியப்பா பெயரும் கருப்பையா என்பதால் எனது பெரியப்பாவை சுப்பையா என்று அழைப்பார்கள் என்றால் சரியல்ல.

6. நான் தற்போது குடியிருக்கும் வீடு கருப்பையா அரசாங்கத்தில் அடமானம் வைத்து கட்டிய வீடு என்றால் சரியல்ல.

**சாட்சி தொடர்ந்து எதிர்கேள்வியை எழுப்பிக்கொண்டுயிருந்தால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**